முருகப்பெருமான் துணை

***இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக கைப்பட எழுதிய நூலாகும்***

***இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்***

**துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு**

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

**பாகம்: 631**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

21.06.2021, திங்கட்கிழமை

1. கந்தமகா எந்தன் சக்தி அரங்கா
கலியுகத்தை காக்க வந்த ஞானதேசிகா
சிந்தைவைத்து என்மேல் செய்ததவத்தால்
செப்பிடுவேன் பலபிறவி தொடர்பின் வழி
2. தொடர்பாலே என் அவதாரமாக வந்த
தேசிகனே உந்தனுக்கு ஞானஅறிவுரை ஆசி
அவனியிலே சுப்ரமணியர் யானும் அருளுவேன்
அரங்கனே நீ கலியுகத்தின் பொக்கிஷம்
3. பொக்கிஷமாய் மக்களை நோக்கி
புண்ணியவழிகாட்டி காத்தருள வந்த
ஆக்கமான பிரணவ சக்தி நீயப்பா அழியாமை தருகின்ற மகா யோகி நீயப்பா
அப்பனே உந்தனுள் என் சக்தி அனைத்துமாக நிரம்பி ஆற்றல்கூட்ட
4. கூட்டவே அரங்கன் உன் வெளிப்பாடு வருமுலகில்
குவலயத்தை வழிநடத்தும் ஞானமாகவும்
தர்மத்தை காக்கும் மகா சூட்சுமமாகவும்
தரணியவே ஞான ஆட்சிக்கு கொண்டுவரும் சக்தியாகவும்
5. ஆகவுமே அற்புதம் நிகழக்கூடும்
அரங்கன் உன் தொண்டர்படையை கொண்டு இந்த மாற்றம் செய்வேன்
வரங்கள் பெற்று வருகின்ற உன் சீடர்கள் மூலம்
வையகத்தில் வள்ளல் தன்மை பெருகி
6. பெருகியே ஞானிகள் பூஜைபலத்தோடு
பிசகில்லாத எந்தன் வழிபாட்டு சக்தியாலும்
தர்மலோகம் ஞானலோகம் சத்தியலோகம் எனும்
தனிப்பெரும் சூட்சும பலங்கள் எல்லாம் கூடி
7. கூடியே அரங்கன் நீ விரும்புகின்ற வண்ணம்
குறையில்லாத ஞான ஆட்சி மலரும்
தேடியே உலகோர் உன்னை தொடர்ந்து சரணடைந்து
தெய்வபலம் பெற்று அழியாமை பெறுவதோடு
8. பெருமைமிக்க ஞான யுகத்தை படைத்து
பேருலகமே ஞான ஆட்சி தர்ம ஆட்சி
முருகப்பெருமான் என் ஆட்சியை அடைய நேரும்
மொழிந்திட்ட ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–

*ஐயன் வேலவன் அடியினைப் போற்றிட*
*வையகம் போற்ற வாழ்வார் நலமே!*
*பற்றறுத்த வேலவன் பதத்தை பற்றிட*
*நற்றவமும் சித்திக்கும் நமனும் அஞ்சுவன்!*
*ஆட்சிதான் மாற்றமும் அருளுவான் வேலனும்*
*மாட்சிமை மிக்க மக்கள் வாழவே!*

துறையூர் ஓங்காரக்குடில் மூலமாக ஆசான் முருகப்பெருமான் ஆசியால் 20 கோடி பேர்களுக்கு மேலாக தொடர்ந்து அன்னதானம் செய்து வருகிறோம். இனிவரும் காலங்களிலும் முருகப்பெருமான் துணையுடன் மேன்மேலும் சிறப்பாக அன்னதானம் செய்வோம்.

– ஆறுமுக அரங்கமகா தேசிகர்.